DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

S.T.C-340/2022

Prosecution witness - PW 1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.ராஜேஸ்வரி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 present)
13.10.2025- 11.15 AM
முதல் விசாரணை:-

1. நான் பி.கீரந்தை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் இருவரும் உள்ளூர்காரர்கள். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் தண்ணீர் பிடிப்பதில் பிரச்சனை இருந்து வந்தது.

2. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை 05.45 மணியளவில் எனது வீட்டின் அருகில் உள்ள தண்ணீர் பைப்பில் தண்ணீர் பிடிப்பதற்காக சென்றேன். ஆஜர் எதிரிகள் இருவரும் அங்கு பைப்பில் நின்று கொண்டு அதிகமாக தண்ணிர் பிடித்துக்கொண்டிருந்தார்கள். நான் அவர்கள் இருவரிடம் அடுப்பில் உலை வைத்துள்ளேன். அதனால் ஒரே ஒரு குடம் மட்டும் தண்ணீர் பிடித்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். அதற்கு எதிரி மகேஷ் என்பவர் என்னை அசிங்கமாக பேசினார். அதற்கு நான் வயது மூத்தவளை ஏன் அசிங்கமாக பேசினாய் என்று கேட்ட போது அவனை போட்டு தேவடியா மகனே என்று கையில் வைத்திருந்த வெண்கல குடத்தை வைத்து எனது நெற்றியில் அடித்ததில் நான் மல்லாக்கக கீழே படுத்துவிட்டேன்.

3. அருகிலிருந்து எதிரி சாந்தி என்பவர் என்னை பிடித்து இடது பக்க காதை பிடித்து இழுத்து அத்துவிட்டார். கம்மலுடன் காது இரண்டு துண்டாக அறுந்து விட்டது. சம்பவத்தை ஊரில் உள்ளவர்கள் ஊர் சனமே நின்று பார்த்துக்கொண்டிருந்தது. சம்பவ இடத்திலிருந்து ராஜகனி, சுலோச்சனா

ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு என்னை தூக்கினார்கள். சம்பவத்தை கேட்டு ஓடி வந்த கணவர் நாகநாதன் என்னை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு முதலில் சிக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எனது காது அறுந்து விட்டதால் அதை கூட்டுவதற்காக கீழக்கரை அரசு மருததுவமனைக்கு மருத்துவர்கள் அனுப்பி வைத்தார்கள்

4. நான் மாலை 06.00 மணியளவில் கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். நான் அங்கு உள்நோயாளியாக 11 நாட்கள் சிகிச்சை பெற்றேன். நான் சம்பவம் குறித்து முதலில் சிக்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்து விட்டு சிகிச்சைக்காக அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றேன். போலீசார் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது. என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் சொன்னவாறு எழுதப்பட்டிருந்தது. அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். என்னை விசாரணை செய்த அதிகாரியிடம் நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் கூறியுள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு சார்பு ஆய்வாளர் எழுதிய புகாரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறிய ராஜாக்கனி எனது மச்சான் மகள் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து காவல் நிலையம் சென்றேன் என்றால் நான் 6.00 மணியளவில் சென்றேன். நான் காவல் நிலையம் சென்ற போது என்னிடம் மருத்துவ நமூனா கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் சிக்கல் மருததவமனையில் நான் 07.00 மணி வரையில் சிகிச்சையில் இருந்திருப்பேனா என்றால் ஆமாம். நான் கீழக்கரை மருத்துவமனைக்க

எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 08.00 மணிமுதல் 08.30 மணி இருக்கும். என்னை விசாரணை செய்த அதிகாரியிடம் நான் எதிரிகள் வெண்கல குடத்தினால் அடித்ததாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. குடத்தினால் அடித்ததாக கூறியுள்ளேன். என்னை விசாரணை செய்த மருத்துவரிடம் எந்த ஆயுதத்தினால் அடித்தார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை.

கீழக்கரை மருத்துவமனையில் நான் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 11 நாட்கள் இருந்தேன். சுலோச்சனா எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு மச்சான் மகள். எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி தாக்கவில்லை என்றாலும், நான் தான் எதிரிகளிடம் அசிங்கமாக தாக்கினேன் என்றாலும் சரியல்ல. 1வது எதிரி சாந்தி எனது மச்சானின் மருமகள் என்றால் சரிதான். 1வது எதிரி சாந்திக்கு குழந்தை இல்லை என்றால் சரிதான். 1வது எதிரிக்கு குழந்தை இல்லை என்பதை நான் அடிக்கடி பேசினேன் என்பதால் அவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு, எதிர் தரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் கூறிய விபரங்களை நான் சொல்லச் சொல்ல தட்டச்சர் தட்டச்சு செய்த விபரங்கள் சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மா.உ.ம.நீ.ந, கடலாடி